1972 ஆகஸ்ட் 25]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கிழக்குக் கடற்கரை ரோடு கன்னியாகுமரி வரை செல்லுவதைத் தேசிய நெடுஞ்சாலையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனல் மத்திய அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

கருவேலன் குளம்.

*288 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கம்பட்டி கிராமத்திலுள்ள கருவேலன் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) ஆம்.

(இ) திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கருவேலன் குளத்தைத் தனி நபர் ஆக்கிரமித்துக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற இடையூருக இருக்கிருர். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்பு பற்றிய தகவல் இல்லை. குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கம்பட்டி கிராமத்தில் பாசனம் செய்யக்கூடிய அளவுக்குக் குளம் ஒன்றும் இல்லை. இருந்தாலும் சர்வே எண் 180/1, 180/3, 180/4 ஆகிய இடங்களை ஒரு குட்டையாக மாற்றியமைக்கும் உத்தேசம் இருக்கிறது. இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

நொய்யலாற்றின் குறுக்கே அணை.

*289 வினு.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உங்கம்பாளையம் அருகில் நொய்யல் ஆற்றின் மீது அணை ஒன்று கட்டி க. பரமத்தி ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு பாசன வசதி தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

[1972 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வேலாயுதம் பாளையம் கிராமத்தில் நொய்யலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி உங்கம்பாளையம அருகே வளயபாளையம் கிராமத்தில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் திருச்சி மேற்பார்வைப் பொறியாளரின் விவரமான ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து பரிசீலனை செய்தபின் ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : கடந்த 25 ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரவக்குறிச்சி தொகுதியில் எவ்விதமான பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்படாத காரணத்தால், இந்தத் திட்டம் மக்களுக்கு அதிகப் பலன் தருமென்ற காரணத்தால் விரைவில் இதை நிறைவேற்றித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்டிருக் கிறது. இப்போது இந்தத் திட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த மறு பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

அரசினர் தோட்டத்தில் புதிய கட்டடம்.

* 346 வினு—திரு தோப்பூர் திருவேங்கடம், திரு ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை அரசினர் தோட்டத்தைச் சுற்றி அண்ணு சிலையை நோக்கி கடைகளை கட்டி வாடகைக்கு விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அண்ணு சிலையை நோக்கி, அரசினர் தோட்டத்தில் 10 அடுக்கு கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ் பாகத்தில் கடைகளும், மேற்பாகத்தில் அரசின் அலுவலகங்களுமிருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி : பத்து அடுக்கு மாடி ஒன்று கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அதற்குப் பதிலாக அந்தத் தெரு முழுவதிலும் கடை கட்டினுல் 200 கடைகளுக்கு மேல் வரும். அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு 10, 15 லட்ச ரூபாய் வருமானம் வரும். இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்குறிப்பிட்டது பத்து அடுக்கு கட்டடம் பற்றி. அதிலே கீழே கடைகளும், மற்றும் அலுவலகங் களும் இருக்கும். இப்போது அரசாங்க அலுவலகங்கள் பல வாடகைக்